1981 மார்ச் 3]

வரத்துக் கழகங்கள் இலாபத்தில் இயங்கினால் உங்களுடைய எண்ணப்படி நிறைய பேருந்துகளை விட தகுந்த ஏற்பாடு களைச் செய்யலாம். அதற்கான முயற்சியிலே எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து ஈடுபட்டால் நல்லது.

திருவில்லிப்புத்தூரில் சாக்லேட் செய்யும் தொழிற்சாலை.

*வினா எண் 354—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிபுத்தூர் டவுனில் கூட்டுறவு முறையில் பதனீரில் இருந்து சாக்லேட் மிட்டாய் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பனை மரத்திற்கு அடியிலே இருந்து பாலைக் குடித்தாலும் சந்தேகப் படுகிறார்கள்; பதனீரைக் குடித்தாலும் சந்தேகப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அந்தத்தொழிலாளர்கள் இருக்கிறார்கள் ; அவர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பனையிலிருந்து 6 மாதம் தான் பதனீர் வருகிறது. அவர்கள் நலனைக் கருதி, வருடம் முழுவதும் பதனீர் கிடைக்க ஆராய்ச்சி செய்து, அப்படி அதிகப்படியாகக் கிடைக்கின்ற பதனீரிலிருந்து சாக்லெட் மிட்டாய் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை புரிகிறது. பனைமரத்தில் இப்போது 6 மாதம்தான் பதனீர் கிடைக்கிறது. 12 மாதங்களும் பதனீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்று ஆராய்வதற்கு கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக் கழகத்தின் வைஸ் சான்சலரிடம் கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பனை மரத்தையும் தென்னை மரத்தையும் 'கிராஸ் செய்து, 12 மாதங்களும் பதனீர் கிடைக்கும் சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்று பார்த்ததில் முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதற்கான முயற்சி விரைவிலே நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அவ்வாறு ஆராய்ச்சி செய்கின்றபோது அங்கே உள்ள பனைமரங்களில் அதிகமாக நீர் வருகின்ற காரணத்தினால் அங்கே சாக்லேட் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும் தற்போது பனைப் பொருட்களிலிருந்து செய்யக்கூடிய பொருட்கள் அதிகமான அளவிலே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆகவே தமிழ்நாடு அரசே அவற்றைக் கொள்முதல் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமா? தற்போது பனைப் பொருட்களுக்கு போதிய விளம்பரம் இல்லை, எனவே நல்ல முறையில் விளம்பரம் கொடுத்து பொது மக்கள் நன்மை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சாக்லேட் பேக்டரி பற்றி அந்த ஆய்வு முடிந்த பின்னர் பரிசீலிக்கப்படும். மேலும், பனைப் பொருட்களிலிருந்து செய்யக்கூடிய பொருட்களை வெளிநாடுகளில் அதிகமாக விரும்பக்கூடிய சூழ்நிலை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கண்டிப்பாக அனுதாபத்தோடு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே அதிகமான பனை மரங்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து நிறையப் பொருட்கள், பல்வேறு வகையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் பனைப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கென்று ஒரு தனி வாரியம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பனைப் பொருள் தொழில் வாரியம் அமைக்கப்பட்டு அது இயங்கிக் கொண்டு வருகிறது.

LEGISLATURE
SATYAMEVA JAYATE
TRUTH ALONE TRIUMPHS

சமூகநலத்துறையின் கீழ் பணிபுரியும் பாலசேவிகாக்கள், ஆயாக்கள் சம்பளம்.

வினா எண் 355—திருமதி தா. இராசாம்பாள் : திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு சமூநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சமூக நலத்துறையின் கீழ் பணிபுரியும் பாலசேவிகாக்களுக்கும், ஆயாக்களுக்கும் சம்பளத்தை உயர்த்தும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் வழங்கப்படும்?